

**டாக்டர்.எ.பங்கஜம்**

# BEST SOCIAL WORKER

**டாக்டர்.G.பங்கஜம்** என்பவர் லட்சுமி ஆசிரியர் பயிற்சி கல்லூரி, காந்தி கிராமம் மற்றும் மனையியல் துறையில் விரிவுரையாளராகவும், லட்சுமி கல்வியியல் கல்லூரியில் முதல்வராகவும் பணியாற்றியுள்ளார்.

கெய்தான் சத்யா அறக்கட்டளை நிர்வாகியாக 35 ஆண்டுகளாக பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்திற்காக பல பணிகளை மேற்கொண்டுள்ளார்.பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றத்திற்கான கிராம விரிவாக்க பணிகளை மேற்கொண்டுள்ளார்.

ஆரம்பகால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்விக்கான ஆதாரமையமும், குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்களும் வடிவமைக்கப்பட்டது. ஆரம்பகால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி பற்றிய பயிற்சிகள் மற்றும் பெண்களுக்காக சமூகநல வாரிய உதவித்தொகையுடன் 3 ஆண்டுகள் பயிற்சியும் வழங்கினார்.

இந்திராகாந்தி திறந்தநிலை பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தப்பட்ட சமுதாயக் கல்லூரியில் பல்வேறு பிரிவுகளில் பெண்களுக்கு பயிற்சி வழங்கினார்.

சர்வதேசம் மற்றும் தேசிய அளவில் நடைபெற்ற பெண்கள் மற்றும் குழந்தைகள் முன்னேற்றம் பற்றிய 200க்கும் மேற்பட்ட கருத்தரங்குகளில் கலந்து கொண்டுள்ளார், 50க்கும் மேற்பட்ட வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் சிறப்புரை வழங்கியுள்ளார். மற்றும்

பெண்களுக்காக சிறந்த முறையில் தொண்டாற்றி வரும் டாக்டர். எ.பங்கஜம் அன்னாரின் சமூக சேவையைப் பாராட்டி தமிழக அரசின் சிறந்த சமூக சேவகருக்கான விருது 2022 ஆம் ஆண்டிற்கு வழங்கப்படுகிறது.